R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
October 2019



இப்பிரதிகளில் ஒன்றை பெற்றுக் கொள்ள விரும்புவோர் ரூபாய் 100/- மணியாடர் அனுப்பி பெற்றுக்கொள்ளவும் தொடர்புக்கு 9443558041

6379350509

கிறிஸ்துவின் வசனம் வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்தி - Vol.1- 5

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 அக்டோபர் 2019 கனி 11



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்




**Arjunan in Tamil:**
Every Monday 6:00 - 6:15 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV



**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV

**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV



**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P.

எமது
‘ தீ வேர்ட் ஆப் கிரைஸ்ட் ’
புதிய வெளியீடு
கிறிஸ்துவின் வசனம்
ரேடியோ மற்றும் தொலைக்காட்சி
செய்திகள் அடங்கிய
Vol.5 –பிரதியை
எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்



**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

“Go ye into all the world, and preach the gospel to every creature” - Mark 16:15
“The Churches Of Christ Salute you” Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 230

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூரவேண்டும்?
2. நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக என்றவன் யார்?
3. இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் அதனால் சந்தோஷப்பட்ட அப்போஸ்தலன் யார்?
4. இஸ்ரவேலிலே உன் மார்பிலுள்ள உன் மனைவியாகிலும், உன் பிராணனைப்போலிருக்கிற உன் சிநேகிதனாகிலும் உன்னை நோக்கி; நாம் போய்வேறே தேவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொன்னால் அவனை என்ன செய்யவேண்டும்?
5. சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது அதற்கென்றே நான் ஊழியக்காரனானேன் என்ற அப்போஸ்தலன் யார்?
6. ஏசாவுக்கு சேயீர் மலைத்தேசத்தைக் கொடுத்தார், யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எங்கே போனார்கள்?
7. எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து எவைகளைப் பிடித்துக்கொள்ளவேண்டும்?
8. கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டு, அவர்களைப் பெலிஸ்தர் கையிலும், அம்மோன் புத்திரர் கையிலும் என்ன செய்து போட்டார்?
9. எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எப்படியிருங்கள் என பவுல் எழுதுகிறார்?
10. நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும் நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றவள் யார்?

## வேதாகம ஆய்வு... 15

ஆகார்



Hagar

1. பரதேசி என்று அர்த்தம்.
2. எகிப்து தேசப் பெண் – ஆதி.16:1
3. சாராளின் அடிமைப் பெண்
4. ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள் – ஆதி.16:15
5. பவுல் இவளைப் பழைய உடன்படிக்கைக்கு உவமானமாகப் பேசுகிறான் – கலா.4:25

சிறுவர் பகுதி

## தந்திரம் - DECEPTION

வேதபகுதி:மத்தேயு 4:1-10



ஏமாறிய ஆதாம், ஏவாள்: தந்திரம் என்றால் சூழ்ச்சி, அல்லது ஏமாற்றுதல் என்று பொருள். பிசாசானவன் தந்திரமுள்ளவன் ஆகையால் ஆதியிலே நம் முற்பிதாக்களாகிய ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினான். “நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்று ஏவாளைப்பார்த்து கேட்டான். அதற்கு ஏமாந்துபோன ஏவாள் நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும்,தோட்டத்தின் நடுவிலே இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார். அதற்கு சர்ப்பம் நீங்கள் சாகவே சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான். இதற்கு கீழ்ப்படிந்து பறித்து புசித்து பாவத்தின்கீழ் தள்ளப்பட்டார்கள்.

ஏமாறாத இயேசு: பிசாசு இயேசுவை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் அவனுக்கு பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரைத் தேவாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். நீங்களும் உங்களை ஏமாற்ற வரும் பிசாசை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு எதிர்த்து இயேசுவைப்போல அப்பாலே போ சாத்தானே என்று சொல்வீர்களா?

### மனப்பாட வசனம்

**“சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே” (2கொரி.2:11)**

‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 அக்டோபர் -2019 கனி - 11

ஆசிரியருரை

## அழியாத அன்பு
## Undying Love



அன்பு நிலையானது. அந்த அன்பில் நீங்கள் நிலைத்திருக்கின்றீர்களா? அந்த அன்பு ஒழியாதது, அழியாதது. இதைக்குறித்து பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" (1கொரி.13:8). ஒழிந்துபோகக்கூடிய சிலவற்றைப் பிடித்துக்கொண்டு அநேகர் அதை முக்கியப்படுத்துகின்றனர். தேவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனிதனோடு எப்படி உறவாடி வந்தார் என்பதை நாம் வேத வசனங்கள் மூலமாக அறிகிறோம். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக வெளிப்பட்டிருக்கிறார். இவர் அன்பு நிறைந்தவராயிருக்கிறார். பூரணமான இவருடைய வருகையால் குறைவானவைகள் ஒழிந்துபோயின என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். பழைய ஏற்பாடு நிழலாக இருந்தது. நிஜம் வந்தவுடன் நிழலை நாம் நோக்கவேண்டிய அவசியமில்லை. நிஜத்தை நோக்கிப்பார்த்து நாம் இரட்சிக்கப்படவும் அந்த அன்பில் நிலைத்திருக்கவும் வேண்டும். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என திருமறை நமக்குப்போதிக்கிறது (யோவா.3:16). தேவனுடைய அன்பு கிரியைகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தம்முடைய குமாரனை நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு செலுத்தியிருக்கிறார். பாவத்தின் ஆசையினால் விழுந்துபோன மனிதனை மீட்டு தம்மோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக பாவத்திற்கு பலியாக இயேசுவை ஒப்புக்கொடுத்தார். அவர் தாமே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமாகின்றோம். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து அவரை வெளிப்படுத்தினார். தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே தேவனுடைய குமாரனும் அன்புநிறைந்தவராயிருக்கிறார்.

இயேசுவும் தம்முடைய சீஷர்களிடத்தில் அன்பாயிருந்தார். லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார் எனக் காண்கிறோம். ஆனால் லாசரு மரித்தபோது அவர் அந்த மரண சடங்குகளில் கலந்துகொள்ளும்படியாகவும், துக்கம் விசாரிக்கும்படியாகவும் கடந்து செல்லவில்லை. மரண செய்தி அறிந்து நான்கு

நாட்களுக்குப்பின்பு சென்றார். ஏன் இப்படிச் சென்றார் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. அங்கு தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக நான்கு நாட்களுக்குப்பின் சென்றார். சில வேத ஆராய்ச்சியாளர்கள். அப்பொழுது இருந்த ஜனங்களின் நம்பிக்கை மரித்த சரீரத்தினுடைய ஆவி மூன்று நாட்களுக்கு பூமியில் இருக்கும் என்ற நம்பிக்கையுடையவர்களாயிருந்தனர். ஆகையால் இயேசு நான்காம் நாள் சென்று லாசருவை எழுப்பினார். இரண்டாம் நாளோ மூன்றாம் நாளோ சென்று எழுப்பியிருந்தால் நம்ப மாட்டார்கள் ஆகையால் நான்காம் நாள் சென்றார் என்று கருத்து சொல்லுகிறார்கள். நான்கு நாட்களுக்குப் பின் லாசருவின் வீட்டிற்கு வரும்போது சிலர்; "இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்; குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்" (யோவா.11:36,37). ஒருவர் மீது அன்பு செலுத்திவிட்டு பின்பு அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருந்தால் உலகம் நம்மை தூற்றிவிடும். அந்தப்படியாக இயேசுவை சொல்ல ஆரம்பித்தார்கள். அவர் அவனில் அன்பாயிருந்தார் என்பதை ஜனங்கள் கண்டு கொள்ளும்படியாகவும், தம்மை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்ற வசனத்தை உறுதிப்படுத்தும்படியாகவும், தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாகவும் அவனை உயிருடன் எழுப்பினார். பார்த்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். அவரில் அன்பாயிருக்கிறவர்கள் நிச்சயமாக அவரோடு உயிரோடு எழுப்பப்படுவார்கள். கர்த்தருக்குள் மரித்தவர்கள் அவருடைய வருகையிலே நித்தியத்திற்கு அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

**இரண்டாவது** அன்பு சகலத்தையும் சகிக்கும் எனக் காண்கிறோம். நான் அன்பாயிருக்கிறேன் என்று சொல்வார்கள் ஆனால் அவர்களிடம் சகிப்பு தன்மை இருக்காது, விசுவாசமிருக்காது, ஏன் நம்பிக்கையும் இருக்காது. பின்பு எப்படி அவர்கள் நாங்கள் அன்பாயிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். வசனம் சொல்லுகிறது; அன்பு "சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" (1கொரி.13;7). அன்பிற்கு இத்தனை குணங்கள் இருக்கிறது. மூன்றே எழுத்தில் அமையப்பெற்ற அன்பு பூரணமுள்ளது. இயேசுவின் நாமத்தினிமித்தமாக அப்போஸ்தலர்கள் எல்லாவற்றையும் சகித்தார்கள். "அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப்பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (அப்.5:40-42). அந்நாட்களில் இயேசுவை கிறிஸ்து என்று பிரசங்கித்தால் அவர்களுக்கு மரணதண்டனையும் கிடைக்கும். அப்படிப்பட்ட கட்டளையிருந்தபோதும் அவருடைய அன்பின் நிமித்தமாக என்ன அடிவாங்கினாலும் சகித்துக்கொண்டு அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியால் சந்தோஷமாக சுவிசேஷ வசனத்தை அறிவித்து கிறிஸ்துவின் கட்டளைகளை நிறைவேற்றினார்கள். இன்று இப்படிப்பட்ட சுவிசேஷகர்களைப் பார்க்கமுடிவதில்லை. வீட்டிற்குள்ளே உட்கார்ந்துகொண்டு நாங்கள் அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்று சொல்லும் வாய்வீச்சு சுவிசேஷகர்களைத்தான் பார்க்கமுடிகிறது. கர்த்தருக்காக எதையும் சகிக்கக்கூடிய ஆதி அப்போஸ்தலர்களைப்போன்றவர்களை நாம் பார்க்கமுடியவில்லை. அப்படிப்பட்டவர்கள்





# கோபம் ஒரு தெரிவு

## Anger Is A Choice

Savador B.Cariage
-TVOT

**வா**ழ்க்கை என்பது குழப்பங்கள், சோர்வுகள், ஏமாற்றங்கள் நிறைந்தது. இதுவே நமக்கு மிக எளிதாக எல்லா நேரங்களிலும் கோபமடையச் செய்கிறது. நம்முடைய ஊடகம் சமுதாயம் போன்றவைகள் மிக உதவியாக இருக்கிறதில்லை. எல்லா நேரத்திலும் நீங்கள் செய்தித்தாள்களை வாசிக்கிறீர்கள், டி.வி -யைத் திருப்புகிறீர்கள், அல்லது சினிமா பார்க்கிறீர்கள், அங்கே வன்முறைச் சம்பவங்கள் இல்லாத காட்சியை காண்பிக்கிறது மிகக் கடினம். கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை மிகவும் சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு ஒரு ஏழு வயது சிறுவன் (பிலிப்பைன்ஸில்) தன்னுடைய பெற்றோர் இல்லாதபோது தன்னைக் கவனித்துக் கொள்ளும் ஒருவரை டி.வி சேனல்களை மாற்றியதற்காக சுட்டு விட்டதைப்பற்றி வாசித்தோம். அவன் பார்த்துக் கொண்டிருந்த அந்த நிகழ்ச்சி 'ROBOCOP' என்ற நிகழ்ச்சியாகும். அந்தச் சிறுவன் கட்டுக்கடங்கா கோபத்தினை தனக்குள் கொண்டிருந்ததைக் காவலர் கவனித்தார்.

நம்முடைய குழந்தைகள் சிறுவதிலேயே அதிகப்படியான கோபங்கொள்ளுகையில், நம்முடைய சமுதாயம் அதை உற்றுநோக்க வேண்டியது மிக அவசியமான தேவையாயிருக்கிறது. வேதாகமம் இந்தப் பிரச்சனைக்கு ஞானத்தையும் தீர்வையும் அளிக்கிறது.

1. வேதம், "கோபங்கொண்டாலும் உங்கள் கோபத்தில் பாவஞ்செய்யாதீர்கள்" என்கிறது. வேறு வார்த்தையில், அது உங்களை மேற்கொள்ளவிடாதீர் என்பதாகும். உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கோபம் உங்களைக் கட்டுப்படுத்த இடமளிக்காதீர்கள்.

2. வேதாகமம், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" இவ்வசனத்தின் அர்த்தமாவது "உங்கள் இருதயத்தில் உள்ள எரிச்சல் தணியக்கடவது" என்பதாகும். உங்கள் எரிச்சல் உங்களை மேற்கொள்ளுவதற்கு முன் உங்கள் எரிச்சலை சீக்கிரமாய் மேற்கொள்ளுங்கள் எனக் கூறுகிறது.

3. வேதாகமம் மன்னிக்கச் சொல்லுகிறது. "நான் உங்களை மன்னித்திருக்கிறதைப் போல மன்னியுங்கள்" என இயேசு கிறிஸ்து கூறுகிறார். உங்கள் எரிச்சல் உங்களை விட்டு அகலக்கடவது. விருப்பத்தோடே புண்படுத்துதலைத் தாங்கிக் கொள்ளுங்கள், கிரயம் செலுத்துங்கள் - அதுவே மன்னிப்பாகும்.

நீங்களாகவே சரிபார்த்துக் கொள்ளவும், தேவன் கோபத்தைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் எனக் கற்றுக் கொள்ளவும் வேதாகமத்திலுள்ள பல வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கோபங்கொள்ள அல்லது கோபங்கொள்ளாமலிருக்க நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது சரியானவற்றைத் தெரிந்துகொள்ளவும்!

மாற்கு டுவைன், என்பவர், "மன்னிப்பு என்பது கீழே விழுந்து நசுக்கப்பட்டிருக்கிற பல வண்ணப்பூக்களின் நற்கந்தம் போன்றது" என்றார்.

(வேதவாக்கியங்கள்: எபே.5:25-32; ரோமர்12:9-21; நீதி.14:29,19:11; மத்.6:14; மாற்3:28; 1யோவா.1:9; மாற்.11:25; லூக்.17:4; கொலோ.3:13; யாக்.5:16; 1கொரி.13).

*கோபம் உங்களை பிரச்சனைக்குள்ளாக்கி அங்கே பெருமை உங்களைத் திருப்திப்படுத்துகிறது*

6. தேக்கிவைக்கப்பட்ட ஆத்திரத்தை விட வேறொன்றும் ஜெபத்தை முடக்க முடியாது. தேவன் ஜெபத்தை நிறுத்து என்று சொல்லும் மற்றுமொரு தருணம் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக ஜெபிக்கும்போது

**ஜெபம் பாவங்களைக் கழுவமுடியாது**

1. சவுலின் இரட்சிப்பு அப்போதலர் 9,22 மற்றும் 26 அசல் குறிப்பு 9ம் அதிகாரத்திலுள்ள பின்பு சவுல் 22 மற்றும் 26 அதிகாரங்களிலுள்ள பிரசங்கங்களில் திரும்பச் சொல்லுகிறார்.

2. தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் சவுல் கண்ட தரிசனத்தைப் பற்றிச் சொல், அனனியா இவருடைய வீட்டிற்குப் போகும்படி யூதாவின் வீட்டிலே தர்சுப்பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு அவன் இப்பொழுது ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறான் (அப். 9:11).

3 அப்போஸ்தலர் 22:16

ஜெபிப்பதற்கு பதிலாக, இப்பொழுது தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று தன் விசுவாசத்தை அறிக்கை செய்யும் நேரமிது. பவுல் அதை உடனே செய்தார்.

4. கொர்நேலியு ஜெபிக்கும் மனிதனாக இருந்தார். ஒரு தூதன் அவரைப் பாராட்டி அவன் இரட்சிக்கப்படுவதற்குக் கேதுவான வார்த்தைகளைச் சொல்லும்படி பேதுருவுக்கு ஆள் அனுப்பி அழைத்து வரச் சொன்னான் (அப். 11:13-14). அவருடைய ஜெபமும் அவருக்கு இரட்சிப்பைக் கொண்டு வரவில்லை.

5. அவன் ஜெபிப்பதை நிறுத்திவிட்டு தேவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் காரியங்களைச் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டான்.

6. பேதுரு வந்த உடனே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான் (அப். 10:48). அவர்கள் ஜெபிக்கும்படி ஒருபோதும் கட்டளையிடப்படவில்லை.

அ) இன்றைக்குள்ள நவீன காலத்திலே கொள்கை என்னவென்றால் ஜெபமும் விசுவாசமும் வல்லமையுள்ளது. அது வேறெந்த செயலுமின்றி மனிதனை இரட்சிக்கும் என்பதே.

1. மாதிரியாக பாவியின் ஜெபம்... புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு பாவியும் இரட்சிக்கப்பட ஜெபம் பண்ணவேண்டுமென்று சொல்லப்படவில்லை.

2. மாதியாக அநேகர் ஜெபத்தைக் கீழ்ப்படிதலிலுள்ள வாழ்க்கைக்கு மாற்றாக எடுத்துக்கொள்கின்றனர். அதுபோல சிலர் தேவனைத் தொழுது கொள்வதில்லை. ஆனால் தினமும் ஜெபிக்கிறேன் என்று சொல்லுகிறார்கள்.

அ) ஒரு கிறிஸ்தவனின் கீழ்ப்படியாத வாழ்க்கை முறையை ஜெபம் மன்னிக்காது.

1. யோவான் மரணத்துக்கேதுவான பாவத்தைக் குறித்து சொல்லி அதற்காக நீங்கள் ஜெபிக்கக் கூடாதென்று சொல்லுகின்றான் (1யோவா. 5:16)

2. தான் மனந்திரும்ப முடியாதென்று ஒருவன் சொல்லுகிற பாவமே மன்னிக்கப்படாத பாவம் கீழ்ப்படிதலை தொடர்ந்து வராத ஜெபம் மதிப்பற்றது.

ஆனால் பயனற்ற செயல் தொடராதிருந்தால், ஜெபம் வல்லமையானது, அது தேவையானதும் கூட.

ஜெபியுங்கள்



- தேவன் நமக்குச் செய்தவற்றிற்கு முதலாவது நன்றி சொல்லி...
- நமது வெளியீடுகளுக்காக...
- இம்மாத ஊழியங்களுக்காக...



எழும்பி சுவிசேஷவசனத்தைப் பயமின்றி அறிவிக்கவேண்டும் அதற்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

நம்மை தெரிந்துகொண்ட தேவன் நம்மோடிருக்கும்போது நாம் அச்சப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தர் அப்போஸ்தலர்களைக் கொண்டு அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்தார். நான் சதாகாலங்களிலும் உங்களோடு இருக்கிறேன் என்று சொல்லி அவர்களை உலகமெங்கும் அனுப்பினார். அவர்கள் அவருடைய நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருந்து கிரியைகளை நடப்பித்தனர். பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் தூக்கி மீதியானியரிடம் விற்றுப்போட்டனர் அவன் சோர்ந்துபோகவில்லை. "தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்துதேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான்" (அப். 7:10). யோசேப்பு கர்த்தர் தன்னை கைவிட்டு விட்டாரே என்று நினைத்து அவன் துக்கமுகமாய் இருக்கவில்லை. எங்கே சென்றாலும் கர்த்தர் தன்னோடு இருப்பதை உணர்ந்துகொண்டான். இயேசுவின் அன்பு நம்மை நேசிக்கிறபடியால், எல்லாவிதமான உபத்திரவங்களிலும் நாமும் காப்பாற்றப்படுகிறோம். அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு எகிப்தின் அதிபதியானான். இது எதினால் வந்தது? அவன் உபத்திரவங்களை சகித்தான், விசுவாசித்தான், நம்பினான். அன்பின் தேவன் அவனுடைய எல்லாவிதமான உபத்திரவங்களிலும் அவனை விடுவித்தார். அவனோடு கர்த்தர் இருந்தபடியால் அவனை சேர்ந்தவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதை அவனோடிருந்தவர்கள் கண்டு ஆச்சரியப்பட்டனர். அன்பு வாசகரே, உன்னோடு தேவன் இருக்கும்போது நீ ஆசீர்வாதமுள்ள மகனாக, மகளாக இருப்பாய். நீ அன்பின் தேவனைப் பற்றிக்கொண்டிரு.

**மூன்றாவது** அன்பு அழியாதது. அன்பை ஒழித்துவிட பிசாசும் அவனுடைய கூட்டாளிகளும் முயற்சித்து வருகிறார்கள். ஆகையால் தேவனால் உண்டாக்கப்பட்ட அனைத்திற்கும் எதிராக ஆதிமுதலாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறான். தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் இவனோடு எதிர்த்துப்போரிட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அன்பை ஆயுதமாக தரித்தவர்கள். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்" என்று பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (எபே. 6:24). சிலர் கர்த்தர் கொடுத்தால் நல்லவர். கொடாவிட்டால் அவரை நாம் எப்படி நம்புவது என்று சொல்லி விசுவாசத்தில் ஆட்டம் கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். கிறிஸ்துவினிடத்தில் அன்புகூருகிற நாம் அழியாத அன்பு செலுத்தவேண்டும். அவர் நம்முடைய பாவத்தை முற்றிலுமாக கழுவியவர். பாதிமட்டுமல்ல முழுவதுமாகக் கழுவப்பட்டோம். இப்படி கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்ட நாம் அவரை முழுவதுமாக நம்பி அன்பு கூரவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்பொழுது அவருடைய கிருபை நம்மோடிருக்கும். பவுலோடு கர்த்தருடைய கிருபை இருந்தது. அவர் மூன்று முறையும் தன்னுடைய காரியத்திற்காக கர்த்தரை நோக்கி மன்றாடும்போது; அவருக்கு கிடைத்த பதில்; "என்கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" என்கிறார் (2கொரி. 12:8,9). உங்களுடைய நம்பிக்கை கிறிஸ்துவின் மீது எப்படிப்பட்டதாயிருக்கிறது? கர்த்தருடைய அன்பினால் அவருடைய ஊழியமே உயிர் மூச்சாகக்கொண்டவர் பவுல். எத்தனை பாடுகள், எத்தனை

பிரச்சனைகள், இவையெல்லாவற்றினின்றும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரிப்பவன் யார்? என்று கேள்வி எழுப்புகிறார். அந்த அளவு கர்த்தர் மீது அன்புகொண்டவராயிருந்தார். நீங்களும் அந்தவிதமாக அன்புள்ளவர்களாயிருக்கிறீர்களா? அப்படி அன்பு செலுத்தும்போது அவருடைய கிருபை உங்களைத் தாங்கும்.

பேதுரு ஒருமுறை "இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம்பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான். அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்" (யோவா.21:20-22). பேதுருவைப் பற்றி கர்த்தர் சில காரியங்களைச் சொன்னவுடனே இயேசுவுக்கு அன்பாயிருந்த யோவானுடைய காரியத்தைக்குறித்து பேதுரு இயேசுவிடம் கேட்க ஆரம்பித்தான். அவருடைய அன்பு அழியாத அன்பாயிருந்தபடியால் இப்படிக்கேட்டான். அதற்கு கர்த்தர் நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார். இதனால் அந்த சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று எனக் காண்கிறோம். ஆனாலும், இயேசு அவன் மரிப்பதில்லை என்று சொல்லாமல் நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார். ஆண்டவருடைய அன்பு நிலையானது என்பதை இது காட்டுகிறது.

**இயேசுவின் இரக்கத்தைப்பெற நாம் தேவனுடைய அன்பிலே நம்மை காத்துக்கொள்ளவேண்டுமா?**

ஆம், ஞானஸ்நானம் பெற்றுவிட்டால்போதும் நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் இனி எனக்கு கவலையில்லை. நான் எப்படிவேண்டுமானாலும் ஜீவிப்பேன் என்று அநேகர் நினைத்துக்கொண்டு காலங்களை விரையம் செய்கின்றனர். காலங்கள் கர்த்தருடைய கரங்களில் இருக்கிறது. ஆகையால், "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப்பெறக்காத்திருங்கள்" என யூதா குறிப்பிடுகிறார் (யூதா21). முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். முடிவு பரியந்தம் நிலைத்திராமல் பாதியிலே பின்வாங்கிப்போன ஒரு சிலரைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். அதில் தேமா என்று சொல்லக்கூடிய ஒருவன். இவ்வுலகத்தின் மீது ஆசைவைத்து பின்னிட்டுப்போனான். உங்களுக்கு வரும் பாடுகள், போராட்டங்கள் இவைகளில் நிலைத்திருந்து தேவனுடைய அன்பை நினைத்து அவைகளில் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு நியாயாதிபதியாக வரப்போகும் இயேசுவினிடத்தில் இரக்கத்தைபெறக் காத்திருக்கவேண்டும். இயேசு இவ்வுலகத்தில் முதலாவது நம்முடைய பாவத்தைப்போக்கும் பலியாக வெளிப்பட்டார். இனிவரும்போது அவர் நியாயாதிபதியாக வெளிப்படுவார். அவருடைய நியாயத்தீர்ப்பிலே உங்களுக்கு இரக்கம் கிடைக்க தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### நடப்புச்செய்திகள்

❒ சீர்மிகு நகர திட்டத்தை [ஸ்மார்ட் சிட்டி] செயல்படுத்துவதில் தமிழகம் தேசிய அளவில் 7 வது இடத்தில் உள்ளது.

❒ சூரிய குடும்பத்திற்கு வெளியில் இரண்டு கோள்களுடனான ஒருபுதிய கோள் மண்டலத்தை இலங்கை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



## எப்பொழுது தேவன் சொன்னார், "ஜெபிப்பதை நிறுத்து"
## When God said, "Stop Praying"

பாடம் - 34

-Jerry

**-சென்ற மாத தொடர்**




அ) ஜெபம் அநீதிக்கு பக்கமாகச் செல்ல முடியாது உங்கள் வாழ்வில் வேண்டுமென்று செய்கிற பாவமிருந்தால் அப்பொழுது உங்கள் ஜெபத்துக்கு பதிலளிக்கப்படாது.

1. கிறிஸ்தவமார்க்கத்தின் வரலாறு முழுவதும் மனிதர்கள் பாவத்தோடு ஜெபத்தை நியாயப்படுத்த முயன்றிருக்கிறார்கள்.

2. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் (1யோவா.1:9).

3. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள் ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் (அப்.8:22).

4. முன்பிருந்ததுபோல இப்பொழுது ஜெபம் அர்த்தமுள்ளதாயில்லை என்றால் ஒருவேளை நாம் பாவத்திலிருந்து மனந்திரும்புவதை அலட்சியப்படுத்தி விட்டோம். தேவன் ஜெபிப்பதை நிறுத்து என்று சொல்லும் இன்னொரு தருணம். நாம் ஒப்புரவாகுதலுக்கு பதிலாக ஜெபித்துக் கொண்டிருக்கும்போது (மத்.5:22-24).

இது யூதர்கள் பலி செலுத்துவதைத் தொடர்பு படுத்தி எழுதப்பட்டுள்ளது.

1. கொலை செய்யத் தூண்டக்கூடிய கோபம் மற்றும் உள்ளான உணர்வுகளை கிறிஸ்து கண்டனம் பண்ணியிருந்தார்.

அ) மிருக பலிகள் செலுத்தப்படும்போது உங்கள் இருதயத்தில் கோபம், கசப்பு அல்லது வெறுப்பு ஆகியவை உங்கள் சகோதரர் பேரில் இருக்குமானால் அது பயனற்றதாயிருக்கும்.

3. கிறிஸ்து முதலாவது உன் சகோதரனிடம் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்கும்படி கூறுகிறார்.

நாம் ஆவிக்குரிய பலிகளை செலுத்துகிறோம் நமக்கு ஒரு பலிபீடமுண்டு (எபி.13:10). ஆகையால் அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் (எபி.13:15).

1. நம்முடைய சரீரங்கள் ஜீவனுள்ள பலியாக இருக்கவேண்டும் (ரோம.12:1-2).

2. நீங்கள் பலி செலுத்த வருகிறீர்கள் அதே சமயம் கட்டடத்துக்கு அந்தப்புறத்தில் நீங்கள் பேசக்கூட மறுக்கும் சகோதரன் ஒருவன் நின்று கொண்டிருக்கிறான் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் இருதயம் அவனுக்கெதிரான கடுங்கோபத்தினாலும் கடும் பகைமையினாலும் நிறைந்திருக்குமானால் எப்படியிருக்கும் என்று கற்பனைச் செய்து பாருங்கள்.

3. இயேசு சொல்கிறார் நீங்கள் ஒப்புரவாகி, பின் வந்து என்னைத் தொழுதுகொள்ளுங்கள்.

4. யோவான் சொல்கிறார். கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமல் நாம் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவோம் (1யோவா.4:20).

5. நம்முடைய சகோதரரிடத்தில் நாம் சமாதானமாயிராவிட்டால், எப்படி நாம் தேவனோடு சமாதானமாயிருக்க முடியும் என்று நம்ப முடியும்?

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 13**

**13. சபைகளில் பெண்கள் மூப்பர்களாக இருக்கலாமா?**

1. பவுலும், பர்னபாவும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்தார்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------
2. வயதான பெண்கள் மூப்பர்களாக இருக்கலாம் ☐ வசன ஆதாரம்- ------------------------------------------------------------
3. ஒரே மனைவியை உடைய புருஷனாக இருக்கவேண்டும் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------
4. புருஷன் மரித்தபின்பு மூப்பருக்குரிய தகுதியை ஸ்திரீகள் பெறலாம் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------
5. சபை மூப்பர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும் ☐ வசன ஆதாரம் ---------------------------
6. இளவயதுள்ள விதவைகளை மூப்பர்களாக்கலாம் ☐ வசன ஆதாரம்------------------------------------------------------------
7. மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது ☐ வசன ஆதாரம்- ------------------------------------------------------------
8. உத்தம விதவைகளை மூப்பர்களாக்குவதற்கு பரிந்துரை செய்யலாம் ☐ வசன ஆதாரம் ------------------------------------
9. கிறிஸ்து இயேசுவுக்குள் ஆணென்றும் பெண்ணென்றுமில்லை ☐ வசன ஆதாரம்------------------------------------------------------------
10. எனவே பெண்களும் சபை மூப்பர்களாகலாம் ☐ வசன ஆதாரம் ------- ------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை தத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**



## பழைய பாவமனிதன் களையப்படுதல்

**Putting Off The Old Man of Sin**

திருடுதல் - **Stealing**

*-J.C.Choate*



காயீன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நிலத்தின் கனியை மட்டும் காணிக்கையாக செலுத்துகையில் ஆபேல் காணிக்கை செலுத்துவதில் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பழுதற்ற முதற்கனியாகிய தன்னுடைய ஆட்டினை செலுத்தினான். அதன் விளைவு தேவன் ஆபேலுடைய பலியை ஏற்றுக் கொண்டு காயீனுடைய பலியை நிராகரித்தார். இந்த காரியம் காயீனை கோபமடையச் செய்தது, அவனுடைய கோபம் ஆபேலை கொலை செய்யும்படி செய்தது. இந்த சம்பவத்தினால் தேவன் அவனுடைய பாவத்தினிமித்தம் அவனை தண்டித்தார்.

மோசேயின் பழைய ஏற்பாட்டு கட்டளைகளில் ஒன்று மிக எளிமையானது, " கொலை செய்யாதிருப்பாயாக" (யாத்.20:13). இருந்தபோதிலும் பத்துகட்டளைகள் அதிகமாக கட்டுப்படுத்தக்கூடியதல்ல, இது எப்போதுமே ஒரு நீதிக் கட்டளையாகயிருக்கிறது. அதாவது பூமி உண்டானது முதல் இவைகளால் மனிதன் தேவனுடைய கட்டளையினாலும், மனிதர்களின் கட்டளையினாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தான். உதாரணமாக, கிறிஸ்துவின் கட்டளையில், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்துகையில், இது நிச்சயமாக நாம் கொலை செய்யக்கூடாது என்று கற்பித்தது. பவுல், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" என்றார் (ரோம.12:17). மறுபடியும், அவன், "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (ரோ.12:19). பவுல் கொலை செய்தல் மாம்சத்தின் செயல் என்றார். மேலும் அவர் இப்படிப்பட்ட செயலைச் செய்கிற எவனும் பரலோகத்திற்குப் போகமுடியாது, அதாவது அவர்கள் மனந்திரும்பி, இப்படிப்பட்ட செயலிலிருந்து திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாதவரை இவர்கள் பரலோகத்திற்குச் செல்ல முடியாது என்கிறார் (கலா.5:21). யோவான் "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளி.21:8).

ஆனால் கொலை செய்வது ஏன் தவறாயிருக்கிறது? ஏனென்றால் வாழ்க்கை என்பது புனிதமானதும் மதிப்பு மிகுந்ததுமாயிருக்கிறது. உலகத்திலிருக்கிற ஒவ்வொருவருக்கும் இது உரியது. இதற்குப் பதிலாக இது பெறக்கூடாததும் அல்லது திரும்பப் பெறக்கூடாததுமாயிருக்கிறது. தேவன் மனிதனை உண்டாக்கினார் ஆனபடியினால் வாழ்வை கொடுத்தவர் தேவன்.


அநேக மக்கள் பல காரணங்களுக்காக கொலை மற்றும் விரோதத்தினால் கொலை செய்வதும் தவறல்லவா? ஆனால் ஒருவனுக்காக தன் சொந்த ஜீவனை எடுப்பதும் கூட தவறு என்பது புரிந்து கொள்ளப்படவேண்டியதாகும். ஒருவன் தற்கொலை செய்யும்போது, அவன் தனக்கும் தேவனுக்கும் விரோதமாக பாவஞ்செய்கிறான். ஆனபடியினால் அவன் மனந்திரும்புவதற்கு வழியே கிடையாது. யூதாஸ் ஸ்காரியோத், அப்போஸ்தலர்களில் ஒருவன், இவன் தற்கொலை செய்கிறவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டானவனாயிருக்கிறான். தற்கொலை செய்வது தவறு மட்டுமல்ல, ஆனால் இது கோழைத்தனமாயிருப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. இதுவும்கூட தனக்குள்ளே ஒரு பாவமாகும். நிச்சயமாக ஒருவன் இப்படிப்பட்ட மனக்கவலையில் தற்கொலை செய்வானானால் தன் செயலுக்காக கணக்குக் கொடுக்க முடியாதவனாயிருக்கக் கூடிய தருணம் உண்டு. எனவே இப்படிப்பட்ட மனிதன் நியாயத்தீர்ப்பில் நிற்பது மிகவும் அபாயகரமானது ஏனென்றால் நாம் எப்போதும் உண்மைகளை அறியாதவர்களாயிருப்போம். தற்கொலை செய்துகொள்ளுவது தவறு என்பதை நாம் அறியோம். மேலும், நம்முடைய சொந்த வாழ்வை நாம் அழித்துக்கொள்ளுவது ஒருபோதும் குற்றமாக கருதவாய்ப்பில்லை.

நம் நாட்களில் இருக்கும் மற்றொருபிரச்சனை, அறிவுத்திறன்கள். அறிவியல் அறிஞர்கள் மற்றும் இதுபோன்ற பலர், உருக்குலைந்துள்ள, மனநோயால் பாதிக்கப்பட்ட சிசுக்களையும் குழந்தைகளையும் கருணைக்கொலை செய்கின்றவர்கள், மரிக்கும் தருவாயிலுள்ளவர்களை தற்கொலை செய்ய அனுமதிப்பது, வயதானவர்களை உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது விஷ ஊசி போட்டுக் கொள்ளும்படி செய்வதில் முன்னேற்றமடைந்து வருகின்றனர். இப்போது இது மிகவும் கொடுரமானது ஆனால் இந்த பழக்கங்கள் ஏற்கனவே சில இடங்களில் கருத்தில் இருந்து வருகின்றது. நிச்சயமாக ஹிட்லரை நாம் அறிவோம். இவன் தன் நாட்களில் இப்பேர்பட்ட சில பழக்கவழக்கங்களை அறிமுகப்படுத்தினான். உலகம் இது கொடூரமானது என எண்ணியது. ஆனால் கடந்த காலத்தில், மக்கள் தொகைப் பெருகிக்கொண்டிருப்பதோடு, அதிகமதிகமான அறிவியல் முன்னேற்றங்கள் உண்டாக்கப்பட்டிருப்பதோடு, பிறகு உலகம் இப்போது மேலும் குறிப்பாக வரவிருக்கின்ற வருடங்களில் இதை வித்தியாசமாக பார்க்கலாம்.ஆனால் இது கருணை என்ற பெயரில், மனிதாபிமான செயலாகவும், தர்க்கங்கள் நிறைந்ததாகவும் அல்லது எப்படியிருந்தாலும், ஆனால் இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களில் ஈடுபடுவது சாதாரணமானது, ஆனால் கொலை செய்வது, கொள்ளையிடுவது போன்றவை மனிதனுக்கும், மனிதனை உண்டாக்கிய தேவனுக்கும் எதிரான பாவமாயிருக்கிறது என நினைக்கலாம். இதற்காக அதிகமான கிரயம் செலுத்த ஒன்றுமில்லாத போதிலும் மனித வாழ்க்கை மிகவும் எளிதானது என்று நினைப்பதற்கு உங்களை வஞ்சிக்க இடமளிக்காதீர்கள்.

இதற்கப்புறம் கருக்கலைப்பும் ஒன்றுதான். கருக்கலைப்பு என்றால் என்ன? இது குழந்தை கற்பபையிலேயே கொல்லப்படுவதாகும். அத்துடன் பிறப்பதற்கு முன்பே குழந்தையைப் பிடித்து இழுத்துக் கொல்லப்படுதல். அதிகமான



**பொது அறிவு வினா விடை**



**1. சர்தேச மனித உரிமை தினம் எது?**

அ) டிசம்பர் 10 ஆ) அக்டோபர் 14 இ) மார்ச் 8

**விடை:** (அ) டிசம்பர் 10

**2. இந்திய மக்களவையின் முதல் பெண் உதவி நடுவர் யார்?**

அ) சரோஜினி நாயுடு ஆ) மரகதம் சந்திரசேகர் இ) வயலட் ஆல்வா

**விடை:** (இ) வயலட் ஆல்வா

**3. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது எப்போது?**

அ) நவம்பர் 26,1950 ஆ) ஜனவரி 26,1950 இ) ஆகஸ்ட் 15,1947

**விடை:** (ஆ) ஜனவரி 26,1950

## தேவ அன்பு
## The Love of God

*-Betty*

**மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.**



**வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தின் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்தில் இருக்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கறை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.**

## தெரிந்துகொள்வோம்

- லட்சத்தீவுகளின் தலை நகர் காவரத்தி.
- பார்லிமெண்ட் ஆட்சி முறைதோன்றிய நாடு பிரிட்டன்
- முதலை முட்டையிலிருந்து வெளிப்படும் முதலைக் குஞ்சு முட்டையைவிட 3 மடங்கு பெரிதாக இருக்கும்.
- நல்ல மிளகு 'கருப்புத்தங்கம்' என அழைக்கப்படுகிறது.
- சரித்திர நாவலாசிரியர் சாண்டில்யனின் உண்மையான பெயர் எஸ்.பாஷ்யம்.
- மனித இரத்தத்தை பெண் கொசு உறிஞ்சுவதன் காரணம் தனது முட்டைகளை உருவாக்கத்தேவையான புரதச் சத்தினைப் பெறுவதற்காக.
- வயிற்றில் பல் கொண்ட பறவை கிளி.

***-K.R.K.Ravi Asir***

உண்டாகும்படி ராஜமேன்மை அவளுக்குக் கிடைத்திருந்தது. இன்று நமக்கோ ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்துள்ளது. இந்த ராஜமேன்மை நம்முடைய குடும்பத்தாரின் வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கக் கூடாதா?. 1தெச.1:7-10-ல் கூறப்பட்டுள்ளபடி தேவனை அறியாத நம்முடைய குடும்பத்தாரை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமானவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதும், மன்றாடுவதும் மிகவும் அவசியமல்லவா? அன்பு சகோதரியே, உங்கள் கணவனின் இரட்சிப்பைக்குறித்தும், பிள்ளைகளின் இரட்சிப்பைக் குறித்தும் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டாம். ஐயோ, இரட்சிப்பைக் குறித்து பேசினாலே வீட்டில் ரகளை தான் ஏற்படும் என்கிறீர்களா? தேவசமூகத்தில் தரித்திருந்து வேதாகமத்தின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து வரும் அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைக் கட்ட ஆரம்பியுங்கள். உங்கள் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை உங்கள் கணவர் பார்த்து போதனையின்றி உங்கள் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார் (1பேது.3:1,2). தேவவசனம் தூஷிப்பப்படாதபடிக்கு உங்கள் புருஷரிடத்திலும், உங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவராகவும், தெளிந்த புத்தியுள்ளவராகவும், கற்புள்ளவராகவும், வீட்டில் தரித்திருக்கிறவராகவும், நல்லவராகவும், உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவராகவு மிருங்கள் (தீத்.2:4,5). இப்படி நடந்து கொள்ளும்போது தேவன் உங்களுக்கு உதவிசெய்வார். நீங்களும் புத்தியாய் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவாகிய பேழையில் ஏறப்பண்ணுவீர்கள். எஸ்தரைப்போல துணிச்சல் கொண்டு, "நீங்கள் ஒன்றுக்குங்க வலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:6,7).

இதோ, கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். "...... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). எனவே நம்முடைய குடும்பத்தைக் குறித்து பாரமுள்ளவர்களாய் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுவோம். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது ........" (கொரி.7:10) என வேதம் கூறுகிறது.

ராஜமேன்மையைப் பெற்றுள்ள நாம், சிலர் கவலையற்றவர்களாயிருப்பது போல நாமும் இல்லாதபடி நம்முடைய குடும்பத்தாரை, நம் ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், விடுதலையும் உண்டாக ஆத்தும பாரங்கொண்டு நம்முடைய தேவாதி தேவனுமாயிருக்கிறவரை நோக்கி, மன்றாடுவோம். வேதம் நம்மில் எதிர்பார்க்கிறபடி புத்தியாய் கிரியை நடப்பிப்போம். நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளைக் கர்த்தர் பார்த்து நம்முடைய குடும்பம் கட்டப்படவும் கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் குடும்பத்தார் அனைவரும் சேர்க்கப்பட்டு நித்திய அழிவிலிருந்து காக்கப்படவும் உதவிசெய்வாராக!.



கருக்கலைப்பு ஒழுக்கமற்ற பெண்களிடம் தான் நடைபெறுகிறது. மேலும் ஆணும் பெண்ணும் இந்தப் பாவச்செயலில் தங்களுடைய பாவத்தை அழிப்பதற்கென்றே செய்கின்றனர். சில நிலைகளில், திருமணமான ஜனங்களே தங்களுக்கு அதிகக் குழந்தைகள் வேண்டாம் என நினைத்து கருக்கலைப்பு செய்கின்றனர். ஆனால் எப்பேர்பட்ட நிகழ்வாயிருந்தாலும் சரி, இது மனித வாழ்வை கொலை செய்கின்ற சர்வசாதாரண உண்மையாயிருக்கிறது. ஆனபடியினால் இது கொலை செய்வதைவிட குறைவானதல்ல. ஆனால் ஒரு குழந்தை பிறப்பதற்கு முன் எப்பேர்பட்ட தாய் இந்த பயங்கரமான செயலை செய்ய விரும்புவாள்? இப்போதும் உலகம் கருவில் பூரண வளர்ச்சியடைந்த குழந்தையைக் கொல்லுவதா அல்லது தாயின் கருப்பையில் புதிய வாழ்வை பெற்றுக் கொள்வதா என விவாதத்தில் ஈடுபடுள்ளது, இது மனித சுபாவமுள்ளது அல்லது இல்லை? நிச்சயமாக இது மனித சுபாவமுள்ளது. மக்கள் தங்களுடைய மனசாட்சியைக் குற்றப்படுத்தும்படி அதை நிரூபிக்க முயற்சித்து உண்மையிலேயே கொலை செய்வதால் ஒன்றுமில்லை என்கின்றனர். உலகத்தைச் சுற்றிலும் சட்டப்படியே ஒவ்வொரு வருடமும் கோடான கோடி கணக்கான குழந்தைகள் கொல்லப்படுகின்றனர் என்பது கவலைக்குரிய ஒன்று. நாம் ஹிட்லர் ஒரு மிருகத்தனமான மனிதன் என நினைத்தோம். இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யும் எந்த வகையான டாக்டர்களையும் நர்சுகளையும் நாம் கொண்டிருக்கிறோம். தினசரி குழந்தைகளை அந்த டாக்டர் கொலை செய்கிறார் என நீங்கள் அறிந்திருப்பீர்களென்றால் உங்களுடைய வாழ்வை காப்பாற்றும்படி அந்த டாக்டரை பயன்படுத்த விரும்புவீர்களா? நான் நிச்சயமாக செய்யமாட்டேன். எப்போதும் டாக்டர்களும் நர்சுகளும் மக்களுடைய உயிரை காப்பாற்றவே முயற்சிக்கும்படி தங்களை ஒப்படைத்துள்ளனர், கொலை செய்யும்படி அல்ல என்றுதான் நினைத்தேன். ஆனால் எல்லா டாக்டர்களும் நர்சுகளும் இப்படிப்பட்ட கொடூரமான வேலையில் இல்லாதது குறித்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அந்தநாள் வருகையில் மொத்த கருக்கலைப்புகளும் சட்டத்திற்கு விரோதமானதாயிருக்கும்.

இதற்கு அடுத்தபடியான காரியம் ஒன்று உண்டு. சில நிகழ்வுகளில் ஒருவன் மற்றொருவனை விபத்தில் கொன்று விடலாம். அந்த மனிதனுடைய கட்டுப்பாட்டை மீறி, இது விபத்தாயிருக்குமானால், நிச்சயமாக அந்த மனிதன் இதற்காக கணக்குக் கொடுக்க வேண்டியவனாயிருக்கமாட்டான். அத்தோடு தன்னைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் யாரோ ஒருவர் உன்னை உன்னுடைய இடத்திற்கு போகவிடாமல் தடுத்து, உன்னுடைய உயிரை காக்கும் பொருட்டும் மற்றவர்கள் உயிரை காக்கும் பொருட்டும், நீ அந்த மனிதனைக் கொன்றிருக்கலாம். யாத்திராகமம் 22:2 இந்த விஷயத்தில் கொலை செய்யப்பட்டவனின் இரத்தப்பழி அவன்மேல் சுமராது என்று கூறுகிறது. இன்றும், நிச்சயமாக இதுதான் உண்மையாயிருக்கிறது. கடைசியாக, மரணதண்டனை பற்றிய காரியமும் உண்டு. பவுல் ரோமர் 13ல் நமக்குக் கூறுகிறார். சட்டம் நம்மைக் காப்பாற்றும் படியாகவும், தவறுசெய்கிறவர்களை தண்டிக்கும்படியாகவும் வேலை

செய்கிறது என்கிறார். ஆனபடியினால் ஒருவன் ஒரு விரோதத்தினால் கொலை செய்கிறவனாய் மாறும்போது, ஒரு கொலையாளியாக மாறும்போது அவன் தான் வாழ்வதற்கான, அத்துடன் வாழ்கின்ற மக்கள் மத்தியில் வாழும் உரிமையையும் இழந்துவிடுகிறான். இதற்குமேலும் அரசாங்கங்கள் நீதிக்குரிய சட்டங்கள் தேவனுக்காக செயல்படுத்துகிறது. மேலும் ஏனென்றால் சட்டத்தின் மூலம் தீமைசெய்பவர்களைத் தண்டிக்கும்படிக்கு இது தேவனுடைய செயலாக இருக்கிறது.

முடிவாக, விரோதத்தினால் கொலை செய்வதும், ஒன்றுமறியாதவர்களைக் கொன்று போடுவதும் தவறு என புரிந்துகொள்ளமுடிகிறது. நாம் இதைச் செய்யக்கூடாது, அல்லது இவ்வகையான எதிலும் பங்குகொள்ளாதிருக்க வேண்டும். நாம் நம்முடைய பிள்ளைகள் தங்களுடைய நண்பர்களுடன் அமைதியோடு வாழும்படி அவர்களுக்குக் கற்பித்து, பயிற்சியளிக்க வேண்டும். ஒருபோதும் வேண்டுமென்றே மற்றவர்களின் வாழ்வை அளிப்பது குற்றம் என்ற உணர்வை கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டும்.

வேதாகமத்தில் தீங்கிழைக்கும் மனிதர்கள் கிறிஸ்துவை, தேவனுடைய குமாரனை, ஒருபாவமும் அறியாதவரை இழுத்துச் சென்று கொடூரமான சிலுவையில் அறைந்து, இவ்விதமாக அவரைக் கொலை செய்தார்கள், விரோதத்தினால் துஷ்டமான வகையில் அவரைக் கொன்றார்கள். ஆனால் கொடூரத்திலும் கொடூரமான அந்த மரண பலியின் மூலமும் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட முடியும் (யோவா.3:16; ரோம.5:6).

என்னுடைய நண்பர்களே, நீங்கள் இரட்சிக்கப்படவும் உங்களுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறவும் இதுபோதுமானது. நீங்கள் தேவனிடத்திலும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் உங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு உங்களுடைய பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவீர்களென்றால், பிறகு கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுவார். பாவமன்னிப்புக்கென்று இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனிதனாக மாறுவது எப்பேர்பட்ட அற்புதம்! தயவுசெய்து இதைக்குறித்து தீவிரமாக சிந்தியுங்கள். உங்களோடுகூட இனிமேலும் நாம் கற்றுக்கொண்டால் அல்லது உங்களுடைய கீழ்ப்படிதலுக்கு உங்களுக்கு உதவிசெய்வோம். தயவுசெய்து இதுபற்றி அறிந்துகொள்வோம்.






பெண்கள் பகுதி

## புத்தியுள்ள ஸ்திரீ

### A Wise Woman

-Glory Arjunan




**ஒ**ரு புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுவாள் என வேதம் கூறுகிறது. குடும்பமாகிய வீடு கட்டப்பட வேண்டுமானால் அது ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் மட்டுமே கூடும். அன்பு சகோதரியே, உங்கள் குடும்பம் எப்படியுள்ளது? என்ன வந்தாலும் அசைக்கப்படமுடியாத கன்மலை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட குடும்பமாக உள்ளதா? அல்லது இடிந்து சின்னாபின்னமாக கிடக்கும் ஒரு கட்டடத்தைப் போல் ஆளுக்கொரு பக்கமாக சிதறிப்போய் கணவன் ஒரு வழியிலும், மகன் இன்னொருவழியிலும் மகள் மற்றொரு வழியிலும் மனம் போல் வாழ்வு என நாட்களைக் கழிக்கின்ற குடும்பத்தைப்போலிருக்கிறதா? சகோதரியே, நம் குடும்பம் நோவாவின் குடும்பத்தைப் போல் ஒரே பேழையில் பயணம் செய்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கூட தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால் அத்துடன் திருப்தியடைந்தவர்களாகவோ அல்லது தன் குடும்ப அங்கத்தினர்கள் குறித்து கவலையற்றவர்களாகவோ இருந்து விடுகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தம் நம்மை பாவமறக்கழுவி சுத்திகரித்து நமக்கு ராஜமேன்மையைக் கொடுத்திருக்கிறது. “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்” (1பேது.2:9) என வேதம் கூறுகிறது.

யூதர்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது மொர்தெகாய் எஸ்தருக்கு அதைத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும், மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான் (எஸ்.4:8). அன்று யூதர்களுக்கு நியமிக்கப்பட்டது சீரீ அழிவு. அந்த அழிவிலிருந்து யூதர்கள் காக்கப்பட வேண்டுமென எஸ்தர் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டியவளாக இருந்தாள். மேலும் மொர்தெகாய் எஸ்தருக்கு, “நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும், என்று சொல்லச் சொன்னான்” (எஸ்.4:14).

ஆனால் இன்று, “தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது ..... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்” (1தெச.1:7-10) என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரிகளே, அன்று அந்த புத்தியுள்ள எஸ்தர், நான் செத்தாலும் சாகிறேன் எனக் கூறி ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணி, மன்றாடி யூதருக்கு விடுதலையும், களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகப்பண்ணினாள். யூதருக்கு வெளிச்சமும், விடுதலையும்




# ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன்

*-K.S.Manikavasagam*

**தே**ராகு கல்தேய நாட்டில் ஊர் என்ற இடத்தில் குடியிருந்தான் (ஆதி.11:28). தேராகு எழுபது வயதாக இருந்தபோது அவனுக்கு ஆபிரகாம், நாகோர், ஆரான் பிறந்தார்கள் (ஆதி.11:26). முற்காலத்தில் ஆபிரகாம் நாகோர் ஆகியோரின் தந்தை தேராகு உட்பட்ட தங்கள் மூதாதையார் நதிக்கு அப்பால் வாழ்ந்தபோது விக்கிரகங்களை வழிபட்டு அதற்கு ஊழியம் செய்தனர் (யோசு.24:2). தேராகு அவனுடைய இனத்தார் ஆபிரகாம் உட்பட ஒரு விக்கிரகாராதனைக்காரர்கள் ஜீவனுள்ள தேவனை அப்பொழுதுதொழுதுகொள்ளவில்லை. அழிவில்லாத தேவனை வழிபடுவதற்கு பதிலாக அழிந்துபோகும் மனிதனைப்போலவும், பறப்பன, நடப்பன, ஊர்வன ஆகியவற்றைப் போலவும் உள்ள உருவங்களை செய்து வழிபட்டனர் (ரோம.1:23). தேவனைப்பற்றிய உண்மைக்குப்பதிலாக பொய்யை ஏற்று படைக்கப்பட்டவரை (சிருஷ்டிகரை) மறந்து படைக்கப்பட்டவற்றை (சிருஷ்டியை) வழிபட்டு அவற்றிற்கு பணி செய்கிறோம் என்ற குற்ற உணர்வு நீண்ட நாட்களாக ஆபிரகாம் உள்ளத்தில் இருந்திருக்கலாம்! எனவே என்னை உண்டாக்கினவரும், என் சிருஷ்டிகருமாகிய மெய் இறைவன் எங்கே? என்ற கேள்வி சதா ஆபிரகாம் உள்ளத்தில் கேட்டுக்கொண்டே இருந்தது. அவருடைய சத்தத்தைக் கேட்கவும், அவர் பார்வைக்கு செம்மையானதைச் செய்யவும் அவருக்குக் கீழ்ப்படியவும் தன்னை அர்ப்பணிக்க சித்தம் கொண்டு எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

ஆபிரகாம் தேவனின் அழைப்பின் வார்த்தையைக் கேட்டார். அவர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ என்றார் (ஆதி.12:1-3). நீண்ட நாள் தேவனுடைய வார்த்தைக்கும் அழைப்புக்கும் எதிர்நோக்கிக் காத்திருந்த ஆபிரகாம் இது தேவனுடைய வார்த்தையின் சத்தமே அவருடைய அழைப்பே என விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்திரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி தான் அழைக்கப்பட்டபோது 'கீழ்ப்படிந்து' தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் (ஆதி.12:5; எபி.11:8). கீழ்ப்படிதல் தேவனுக்குரிய காரியத்திலும் நம்முடைய வாழ்விலும் மிகவும் முக்கியமான சிறப்பான அம்சமாக உள்ளது. ஒரே மனிதனின் (ஆதாம்) கீழ்ப்படியாமையினால் அநேகர் பாவிகளானது போல ஒருவரின் (இயேசு) கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்பட்டதுபோல எனக் காண்கிறோம் (ரோம.5:19).

ஆபிரகாம் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை. அவன் ஏறக்குறைய 100 வயதுள்ளவனாயிருக்கும்போது தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குறுதியை குறித்து அவிசுவாசமாய் சந்தேகப்படாமல் தேவன் வாக்குறுதியை நிறைவேற்ற வல்லவராயி ருக்கிறார் என்று முழு நிச்சயமாய் சந்தேகப்படாமல் நம்பி தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோம.4:19-21). தேவன் ஆபிரகாமை சோதித்தார். அவனுக்கு கொடுத்த மகன் ஈசாக்கை பலியிட கேட்டார் (ஆதி.22:1-2). அவன் பலியிட தயங்கவில்லை அதினால் இப்போதும் நீ எனக்கு பயப்படுகிறவன் என்று அறிந்தேன் என்றார் (ஆதி.22:12). பின்பு ஆபிரகாம் முட்செடியில் கொம்புமாட்டிக்கொண்டிருந்த ஓர் ஆட்டுக்குட்டியை பிடித்து தன் மகன் ஈசாக்குக்குப் பதிலாக பலியிட்டான் (ஆதி.22:13). ஆபிரகாமுடைய விசுவாசத்தினிமித்தம் "விசுவாசத்தின் தகப்பன்" என்றும் (ரோ.4:17), அவன் தேவனோடு ஐக்கியமாய் வாழ்ந்ததால் அவருடைய "சிநேகிதன்" எனவும் அழைக்கப்பட்டான் (ஏசா.41:8). நன்றி தேவனே!



# நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends

சபையோடு இணையச்செய்தல் உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது
Getting Involved with the Church Helps Your Friends பாடம் -9 *-TVOTI*



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

✦சபையானது இழந்துபோனவர்களுக்கு சுவிஷம் அறிவிக்கவும் முயற்சிக்கிறது இது மக்களோடு பல தனிப்பட்ட தொடர்பினை ஏற்படுத்த வழிசெய்கிறது. நீங்கள் ஒருவேளை மற்றவர்களிடம் சுவிசேஷத்தைக் குறித்து பேசி இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும்படி அவர்களுக்கு உதவுகிற "மக்கள் பிரதிநிதி" ஆக இருக்கலாம். சீஷர்களை உருவாக்குவதே நம்முடைய வேலை (மத்.28:18-20). இதன் பொருள் ஜனங்களோடு நேரத்தை செலவழித்து, அவர்கள் தங்களை அறிந்து கொள்ளவும், தங்களுடைய வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவும், வேதாகமக் கோட்பாடுகளை முழுமூச்சுடன் பிரயோகித்து தேவனோடு ஒரு சரியான உறவு முறையினைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு உதவுகிறவராயிருப்பதாகும். சபையானது இவ்வேலை செய்வதற்கு நல்ல அர்ப்பணிப்புள்ள மக்களைக் கொண்டிருக்கக் கடமைப்பட்டுள்ளது. நீங்கள் சபையிலும் அதன் பணிகளிலும் ஆர்வத்துடன் பங்குகொள்வதை உங்கள் நண்பர்கள் பார்க்கும் போது, அவர்கள் அதிகமதிகமாகக் கற்றுக் கொள்ள வாஞ்சிப்பார்கள் ஏனென்றால் சபைக்குள் ஏதோ விசேஷித்த வகையில் அவர்களும் பங்குகொள்ள விரும்புகின்றனர்.

நாம் உலகம் தோன்றுவதற்கு முன்பிருந்தே என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது, வெளிப்படுத்தின விசேஷம் 13:8 இயேசு **"....உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி"** ஆக இருந்தார் என்று சொல்லுகிறது. தேவன் பழைய ஏற்பாட்டு காலம் முழுவதும் செய்த சகலமும் கிறிஸ்து ஜனங்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்கும்படி பலியாவதற்கான ஆயத்தமாகயிருந்தது. இயேசு தம்முடைய அப்போஸ்தலரை நோக்கி பரலோகத்திற்குத் தாம் திரும்பிச் செல்லுவதற்குச் சற்று முன் **"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"** என்று சொன்னார். யுகம் யுகத்திற்கான அவரடைய முழு வேலையையும் செய்யும் பொறுப்பினை நம்முடைய கரங்களில் தேவன் ஒப்படைத்திருக்கிறார் என்பது இதன் பொருள். **இதற்காக அல்லவோ கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் உள்ளனர்!** இதுவல்லவா நாம் செய்ய வேண்டிய இன்றியமையான பணி! நாம் நல்ல சமயசார்பற்ற, நிறைவான வாழ்க்கை வாழ்வது போதுமென்று மனநிறைவுடன் இருப்போமானால், ஒருபோதும் சுவிசேஷத்தையும் நம் நண்பர்களோடும் குடும்பத்தோடும் தேவ அன்பையும் பகிர்ந்து கொள்ளமாட்டோம். நாம் சோம்பேறித் தனமாகப் பொறுப்பற்றவர்களாக தேவனுடைய பெரிதான பொக்கிஷத்தைப் பிடித்துக் கொண்டு அவை நம்முடைய கரங்களிலே மடிந்துபோக அனுமதிக்கிறவர்களாகயிருக்கிறோம் என அர்த்தமாகிறது.

ஆனால் நாம் சுவிசேஷத்திற்காகவும் அதை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கும் தருணத்தை உருவாக்குகிறவர்களாக வாழ்ந்தோமானால், நாம் தேவனுடைய பணியை நிறைவேற்றுவதில் உயிர்துடிப்புள்ள கருவிகளாக இருப்போம். நாம் இதை ஒருபோதும் மறந்துவிடாதிருக்கக் கடவோம்...

**தொடர்புடைய இவ்வேதவாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்:**

மத்தேயு 28:18-20, மாற்.16:15-16, அப்.2:42-47, 20:7,37, ரோம.12:3-8, 1கொரி.12:12-31, கலா.6:10, எபே.1:22-23, 2:20-22, 4:11-16, 5:21-23, கொலோ.1:18.

பெண்கள் பகுதி

# நான் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறேன் என்பது குறித்து கவலையில்லை

## It`s Doesn`t Matter Which Religion I Follow

*-Betty*

உலகில் பல சமயங்களும், பல புனித நூல்களும் பல மத குருக்களும் உண்டு. இந்த பல்வேறு சமயங்களின் ஸ்தாபகர்கள் 'புனிதர்கள்' என தங்கள் சீடர்களால் கருதப்படுகின்றனர். அநேக ஜனங்கள் வழக்கம்போல தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைப் பின்பற்றுவதில் நிலைத்திருந்தாலும், உண்மையில் எல்லா சமயங்களும் ஒன்று என்றும், முடிவில் விளைவானது, எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்குமென்றும் நினைக்கின்றனர். அவர்கள் "எல்லா சமயங்களும் நல்லவனாயிரு, நல்லதைச் செய்" எனப் போதிக்கிறது. இதுவே போதுமானது நீங்கள் முகமதுவையோ அல்லது கிருஷ்ணனையோ அல்லது இயேசுவையோ பின்பற்றினால் பரவாயில்லை எல்லாமே ஒன்றுதான்! என விவேகத்துடன் விளக்குகின்றனர்.

ஆனால் இது ஒன்றானதா? பல்வேறு சமய சீடர்களை பின்வரும் இவைகளின் மூலம் வேறுபடுத்த உங்களால் முடியுமா?

- அவர்களின் ஆடை அணியும் விதத்தை உற்றுநோக்கல்?
- அவர்களுடைய சொற்பொழிவுக்குக் கவனம் செலுத்துதல்?
- அவர்கள் மற்றவர்களை நடத்தும் விதத்தை உற்று நோக்கல்?
- அவர்களுடைய நடத்தை மற்றும் கௌரவத்தை பகுத்துப் பார்த்தல்?
- அவர்களுடைய வாழ்வில் எது முக்கியமானது என்பதை பார்த்தல்?
- அவர்கள் குடும்ப அங்கத்தினரோடு எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை கவனித்தல்?
- அவர்கள் எங்கு, மற்றும் எவ்வாறு ஆராதிக்கிறார்கள் என்பதை உற்றுப் பார்த்தல்?
- அவர்கள் தேவனிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என அறிந்து கொள்ளுதல்?
- அவர்களுடைய வாழ்க்கை தத்துவம், மரணம், மற்றும் பிற்கால வாழ்வு போன்றவற்றை கேள்விபடுதல்?
- அவர்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் பாவத்தை சமாளிக்கிறார்கள் எனக் கற்றறிதல்?
- அவர்களுடைய குரு மற்றும் புனிதநூலின் போதனையைப் படித்தல்?

நிச்சயமாக, ஒவ்வொரு சமயத்தினை ஒப்பிட்டுப்பார்ப்பதில் நாம் இப்பட்டியலை தொடரலாம், மேலும் நாம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை போதனைகளும் பழக்கவழக்கங்களும் அனுதின வாழ்வில் ஒரு முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துவதோடுகூட நித்திய எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறதைக் காணலாம்.

நாம் ஏதோ சில சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நமது முற்பிதாக்களின் சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கூட்டத்தாருடைய சமயத்தைப்பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. தனித்தனியே, ஒவ்வொரு மனிதனும் ஒரு அழிவில்லாத ஆத்துமாவாகும், மேலும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் நாம் தெரிந்தெடுக்கும் சமயத்திற்காக நித்தியத்தில் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்போம். நாம் உணர்ச்சியற்றவர்களாய், அக்கறையுடனிருக்க விரும்பாதவர்களாய் இருந்தால், நாம் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறோம் என்பது பற்றி கவலையில்லை என்ற தீர்மானத்திற்கு வரலாம்.



நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால் ஒப்பிட்டுப்பார்க்க, போதனைகளைக் கற்க, ஜனங்களின் வாழ்வின் முடிவில் ஏற்படும் விளைவைக் காணவும்கூட அதிக விருப்பமுடையவர்களாயிருப்போம், ஏனென்றால் இவையெல்லாவற்றின் முடிவிலும் நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்.

கிறிஸ்தவத்துக்கும் மற்றெல்லா சமயங்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளில் முதன்மையானதும் அதிக பிரதானமானதுமான ஒரு வேறுபாடு என்ன? அது இதன் ஸ்தாபகர், இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு அவருடைய மரித்தசரீரம் அடக்கம்பண்ணப்பட்டதேயாகும். இது வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, பல சாட்சியங்களின் விஷயம் தெரிந்தவர்களால் இதை மறுக்க முயற்சித்தும் கூட முடியாமல் போயிற்று அவருடைய சங்கதி அவர் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தவற்றை தொடர்ந்து போதித்த சீஷர்களோடு கூட அங்கு முடிந்திருக்குமானால், விந்தையான கொள்கைகளை விவரித்து, சீஷர்களின் குழுக்களை ஏற்படுத்தி தங்களுடைய சமயத்தை தங்களுடைய மரணத்திற்குப் பின் உலகத்திற்கு மரணசாசனமாக ஏற்படுத்துகிற மற்றவர்களோடு இவர் சமமாக கருதப்பட்டிருப்பார்

ஆனால் இச்சம்பவம் அவருடைய மரணத்தோடும், அடக்கத்தோடும் ஒரேயடியாக முடிந்து விடவில்லை. அவருடைய விரோதிகள் அவரை சிலுவையில் அறைந்த அதே நகரத்தில் அவருடைய சீஷர்கள் அவருடைய சரீரத்தை களவாடிக் கொண்டுபோக ஏதுவில்லாதபடி அவருடைய கல்லறையைச் சுற்றி காவல் வைத்தார்கள், அவருடைய சரீரம் கல்லறையிலிருந்து காணப்படாமற்போயிற்று! வேதாகமத்தில் கூறப்பட்டது போல அவர் உண்மையாகவே உயிர்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதற்கு இரண்டு சாட்சியங்கள் உண்டு.

(1) அவருடைய விரோதிகள் அவருடைய மரித்த சரீரத்திற்கு உரிமை பாராட்டிக்கொண்டிருந்தாலும் கூட காவலாளிகள் கல்லறை வெறுமையாக இருக்க கண்ட பிறகு, அவர்கள் ஒருபோதும் அந்த சரீரத்தைக் கொண்டு வரவில்லை. அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால்அவர் உயிர்த்தெழுந்தார் என்று தெரிவிக்கிறவர்களின் வாய்களை மிக எளிதாக அடைத்திருந்திருக்கக் கூடும்! ஆனால் அவர்கள் அதைச்செய்யவில்லை – ஏனென்றால் அவர்களால் அது முடியவில்லை!

(2) இயேசுவின் மரணத்தின் போது, அவருடைய சீஷர்கள் தங்களுடைய சொந்த ஜீவனை காக்க, பயத்தினால் அவரை மறுதலித்துவிட்டார்கள். அவருடைய உயிர்தெழுதலுக்குப் பிறகு, அவர் அவர்களுக்கு இருமுறை காட்சியளித்து உலகமெங்கும் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதை அவர்கள் செய்து, மிகுந்த உபத்திரவத்தினால் மரணத்திற்குள்ளானார்கள். தங்கள் திடநம்பிக்கையில் இந்த தத்ரூபமான மாற்றம், இயேசு உண்மையாகவே தங்களுடைய உயிர்தெழுந்த இரட்சகர் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டது உண்மை என்பதற்கு ஒரு பலத்த சாட்சியாயிருக்கிறது.

வேறு எந்த ஒரு சமய ஸ்தாபகரும் மரணத்தை ஜெயிக்கவில்லை. இதுவே கிறிஸ்தவத்திற்கும் மற்றவற்றிற்குமுள்ள அடிப்படையான வித்தியாசம். "...இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள்சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:11) என நாம் வாக்களிக்கப்பட்டுள்ளோம்.